S–5642

Sub. Code
23BLT1C1

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

## First Semester

## தமிழ்

## இக்கால இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ‘இதஞ்சொல்லி மாற்றிடு வான்’ யார் என பாரதியார் கூறுகிறார்?

2. புரட்சிக்கப் பால் அமைதி – என்னும் கூற்று யாருடையது?

3. தேசப் படத்தில் உள்ள கோடுகள் எவை என மு.மேத்தா குறிப்பிடுகிறார்?

4. கண்ணீர்ப்பூக்கள் - பொருள் தருக.

5. ஜல்லிக்கட்டில் பசுமாடுகள் – என்னும் சிறுகதை உணர்த்தும் மையக்கரு யாது?

6. கதவு என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?

7. சுரங்கம் குறுநாவலின் ஆசிரியர் யார்?

8. சுரங்கம் குறுநாவலின் மையக்கருவைக் கூறுக.

9. கொல்லிப் பாவை – பொருள் விளக்கம் தருக.

10. கொல்லிப் பாவையில் சிறப்பிக்கப்படும் கடையேழு மன்னர் யார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சேவகனின் செயல்களாக, குணங்களாக பாரதியார் கூறுவனவற்றைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) காட்டின் காட்சிகளை அழகின் சிரிப்பு எங்ஙனம் காட்சிப்படுத்துகிறது ?

12. (அ) தேசத்தைப்போலவே நம் வாழ்க்கையும் தெருவில் நிற்கிறது என்னும் கவிதையில் மு.மேத்தா குறிப்பிடும் காதல் உணர்வைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) செருப்புடன் ஒரு பேட்டி – என்னும் கவிதையின் கருத்துக்களை விளக்குக.

13. (அ) கதவு என்னம் சிறுகதை உணர்த்தும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) கட்டெறும்பு வாயிலாக ஒரு பிரமுகர் சிறுகதையில் ஜெயகாந்தனின் உணர்வுகளை வெளிப்படுத்துக.

14. (அ) சுரங்கம் குருநாவலில் காணலாகும் முதலாளித்துவத்தின் போக்கை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுரங்கம் குருநாவலில் போராட்ட உணர்வுகளைப் புலப்படுத்துக.

15. (அ) கொல்லிப் பாவை நாடகத்தில் வன்பரணரின் செயல்பாடுகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) கொல்லிப் பாவை நாடகத்தில் இடம் பெற்றுள்ள கொல்லிப்பாவை குறித்த கருத்துக்களைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளி.

16. அழகின் சிரிப்பில் அழகு, ஆறு, தென்றல் குறித்து பாரதிதாசனின் கற்பனைத் திறத்தை ஆராய்க.

17. கன்னிப்பூக்கள் கவிதை தொகுப்பில் மு. மேத்தாவின் சமூகச் சிந்தனைகளை ஆராய்க.

18. கு.ப. ராஜகோபாலனின் விடியுமா என்னும் சிறுகதையின் போக்கை ஆராய்க.

19. சுரங்கம் குறுநாவல் உணர்த்தும் சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்வியல் போராட்டங்களை எடுத்துரைக்க.

20. கொல்லிப் பாவை நாடகத்தின் வாயிலாக அறியப்படும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

**S–5643**

**Sub. Code**
**23BLT1C2**

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### நன்னூல் எழுத்தும், யாப்பருங்கலக்காரிகையும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. ஒத்து, படலம் – குறிப்பு வரைக.
2. அளபெடை என்றால் என்ன?
3. பகுபத உறுப்புகள் யாவை?
4. மரப்பெயர் முன் வல்லினம் புணரும் நிலையை எழுதுக.
5. மெய்யீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன?
6. "சுட்டுப்பெயர் முன் ஆய்தம் அன்வரின் கெடுமே" – எடுத்துக்காட்டுடன் விளக்குக.
7. அசையின் வகைகளைக் கூறுக.
8. சீர் என்றால் என்ன?
9. நாற்சீர் அடியால் வரும் பாக்கள் யாவை?
10. கலிப்பாவின் ஓசை யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாணாக்கர் பாடம் கேட்கும் முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நன்னூல் குறிப்பிடும் பத்துவகை அழகுகளை விளக்குக.

12. (அ) பகுபதம், பகாப்பதம் இவற்றைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மெயீற்றுப் பண்புப் பெயர்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

13. (அ) மீன், தேன் என்னும் சொற்கள் புணர்ச்சியில் பெறும் மாற்றங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மகர ஈற்றுப் புணர்ச்சியை சான்றுகளுடன் விளக்குக.

14. (அ) சீர் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தொடையின் வகைகளைக் குறிப்பிடுக.

15. (அ) ஆசிரியப்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை மட்டும் எழுதுக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை மட்டும் எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. எழுத்துகளின் பொதுப்பிறப்பிடம் குறித்து எடுத்துரைக்க.

17. பதவியலில் இடம்பெற்றுள்ள செய்திகளை நன்னூலார் வழி நின்று எடுத்துரைக்க.

18. உருபு புணரியலில் இடம் பெற்றுள்ள கருத்துகளை நன்னூலார் வழி நின்று எடுத்துரைக்க.

19. தளை என்பதை விளக்கி அதன் வகைகளை விளக்கியுரைக்க.

20. வெண்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை எடுத்துரைக்க.

———————

S–5644

| Sub. Code |
|---|
| 23BLTA1 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025

தமிழ்

இயைபுப் பாடம் : தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                                   Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தியைப் பொறிக்கும் வழக்கத்தை முதன்முதலில் கொண்டு வந்த மன்னரின் பெயரைக் கூறுக.

2. ஆதிச்சநல்லூர் குறித்து நீவிர் அறிவன யாவை?

3. சேரரது அடையாளம் பூவாகக் கருதப்படுவது எது?

4. பண்டைக்கால இசைக்கருவிகள் சிலவற்றைக் கூறுக.

5. பல்லவர் கால ஓவியத்திறனை விளக்கி நிற்கும் ஒப்பற்ற ஓவியக்கலைகூட்டத்தின் பெயரைக் கூறுக.

6. மத்தவிலாச பிரககனம் என்றும் நாடகநூலை எழுதிய மன்னனின் பெயரைக் கூறுக.

7. கங்கை கொண்ட சோழபுரம் என்ற நகரை உருவாக்கிய சோழ மன்னன் யார்?

8. 'பூமருவிய திருமடந்தையும் புவிமடத்தையும் புயத்து இருப்ப' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி எந்த மன்னனுக்குரியது?

9. மூக்கறுப்புப் போர் – சிறு குறிப்பு வரைக.

10. உப்புச் சத்தியாகிரகத்திற்காக காந்தியடிகள் தொடங்கிய யாத்திரையின் பெயரைக் கூறுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்வெட்டுகள், செப்பேடுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பெருங்கற்புதைவுகள் உணர்த்தும் வரலாற்றுச் செய்திகள் யாவை?

12. (அ) சங்ககால உணவும் விருந்தோம்பல் பண்பும் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலப் போர் முறைகளை விளக்குக.

13. (அ) களப்பிரர் குறித்து நீவிர் அறிவனவற்றைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பல்லவர் கால சைவ, வைண சமயகால தமிழகம் அடைந்த நன்மைகள் யாவை? விளக்குக.

14. (அ) தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழேச்சுரம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பிற்காலச் சோழர் கால வலங்கை – இடங்கை பிரிவு நிலைகளை விளக்கி எழுதுக.

15. (அ) இந்திய விடுதலைப் போரில் பங்கு கொண்ட தமிழ்நாட்டுச் சான்றோர்களைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆங்கிலேயர் ஆட்சியில் விளைந்த நன்மைகள் யாவை?

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழகம் அயல் நாட்டுடன் கொண்ட வணிக பண்பாட்டுத் தொடர்புகளை ஆராய்க.

17. சங்ககால கலைகள் குறித்து தொகுத்துரைக்க.

18. பல்லவர்களின் ஆட்சியில் தமிழகம் அடைந்த நன்மைகளைக் கட்டுரைக்க.

19. பிற்காலச் சோழர் வரலாற்றில் முதல் இராசராசன் ஆட்சிச் சிறப்பை ஆராய்க.

20. விடுதலைக்குப் பின் தமிழகம் பெற்றுள்ள வளர்ச்சி நிலைகள் குறித்துக் கட்டுரைக்க.

| S–5645 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT2C1 |

## B.Lit., DEGREE EXAMINATION, APRIL 2025

### Second Semester

### தமிழ்

### அற இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க

1. எது விரும்பதத்க்கதன்று என்று வள்ளுவர் சுட்டுகிறார்?

2. இம்மை–மறுமை இரண்டுக்கும் நன்மை உண்டாக்குவது எது?

3. குற்றம் என வள்ளுவர் கூறுவது யாது?

4. உலகம் முழுவதையும் வசப்படுத்த வள்ளுவர் கூறும் வழி யாது?

5. நாலடியார் குறிப்பு வரைக.

6. காயா மரத்தின் பூ எந்நிறத்தையுடையது? அது எதை ஒத்து விளங்கியது?

7. கல்வி குறித்து இனியவை நாற்பது கூறும் கருத்து யாது?

8. ‘கற்கதரு’ என்பதைச் சான்றுகாட்டி குமரகுருபரர் கூறும் கருத்து யாது?

9. தாளாளன் என்பவன் ______________ வாழ்பவன் – நிரப்புக.

10. கற்றநிந்தார் இயல்பு யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க

11. (அ) விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்தக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) இன்சொல்லின் மாண்பு குறித்த வள்ளுவரின் கருத்துகளை விவரி.

12. (அ) செயல் என்பது குறித்த வள்ளுவரின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) காலமறிதலுக்கு வள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக.

13. (அ) பொறுத்துக் கொள்ளுதல் என்பதற்கு நாலடியார் கூறும் வழிமுறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றத்தாரால் அடையும் பயனை குறித்து விளம்பிநாதகளாரின் கருத்தை விளக்குக.

14. (அ) 'இனிது' என பூதஞ்சேந்தனார் பட்டியலிடுபவை யாவை?

(அல்லது)

(ஆ) நீதி நெறி விளக்கம் உணர்த்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

15. (அ) நன்மை குறித்தும், நட்பு குறித்தும் திரிகடுகம உணர்த்துவன யாவை?

(அல்லது)

(ஆ) அறிவுச்செல்வம் குறித்த பழமொழி நானூறு கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை விவரி.

17. 'வலியறிதல்' அதிகாரம் வழி வள்ளுவரின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. நாலடியாரின் பொறையுடைமை வலியுறுத்தம் அறக்கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. இனியவை நாற்பது வழி பூதஞ்சேந்தனார் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

20. நும் பாடப்பகுதியில் அமைந்த திரிகடுகம் கூறும் செய்திகளைக் கட்டுரைக்க.

---

**S–5646**

| Sub. Code |
|---|
| 23BLT2C2 |

## B.Lit DEGREE EXAMINATION, APRIL 2025

### Second Semester

### தமிழ்

### நன்னூல் சொல்லதிகாரமும் தண்டியலங்காரமும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours　　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மூவகை மொழிகளைச் சான்றுடன் குறிப்பிடுக.

2. இருதிணைப் பொதுவினைகள் யாவை?

3. மரபுவழா நிலை என்றால் என்ன?

4. மரபு வழுவமைதி குறித்து எழுதுக.

5. முன்னிலை அசைச்சொல் யாது?

6. நன்னூலார் குறிப்பிடும் உயிரல்லாத பொருள் எது?

7. செய்யுள் நெறி பற்றிக் குறிப்பிடுக.

8. உய்த்தலில் பொருண்மை எது?

9. விபரீத உவமை என்றால் என்ன?

10. அவயவ உருவகம் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உயர்திணைப் பலர்பாற் பெயரினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வேற்றுமையின் வகைகளை எடுத்துரைக்க.

12. (அ) வினா என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அளைமறி பாப்புப் பொருள்கோளைச் சான்றுடன் விவரிக்க.

13. (அ) எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல்லை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒரு குணம் தழுவிய உரிச்சொல்லை எடுத்துரைக்க.

14. (அ) தொகைநிலைச் செய்யுள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) செய்யுள் வகைகளை எடுத்துரைக்க.

15. (அ) வேற்றுப்பொருள் வைப்பணியைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விவரி.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவாக விடையளிக்க.

16. ஆகுபெயரின் வகைகளைச் சான்றுடன் எழுதுக.

17. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? விளக்குக.

18. உயிர்பொருள் குறித்து கட்டுரை வரைக.

19. பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணத்தை விளக்கி வரைக.

20. பின்வருநிலையணி என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் எழுதுக.

———————

| S–5647 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**தமிழ்**

**இயைபுப்பாடம் - தமிழ் இலக்கிய வரலாறு**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. பதினெண் மேற்கணக்கு என்றால் என்ன?

2. ஏலாதி என்பதன் பெயர் காரணத்தை எழுதுக.

3. பௌத்த மதக் காப்பியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

4. சிற்றிலக்கியம் - குறிப்பு வரைக.

5. யாப்பிலக்கண நூல்கள் யாவை?

6. திருமூலரின் அரிய கருத்துக்களைச் சுட்டுக.

7. தமிழில் தோன்றிய உரை வகைகள் யாவை?

8. சங்கரதாசு சுவாமிகள் எழுதிய நாடக நூல்களைப் பட்டியலிடுக.

9. சமணம் சார்ந்த நீதி நூல்களை எழுதுக.

10. தமிழ்ப் புலவர்களின் பெயர்கள் சிலவற்றை குறிப்பிடுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) முச்சங்கம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகை அகநூல்களை எடுத்துரைக்க.

12. (அ) நாலடியார் உணர்த்தும் அறக்கருத்துகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) ஐஞ்சிறுகாப்பியங்களின் சிறப்பியல்புகளை எழுதுக.

13. (அ) பிள்ளைத்தமிழ் இலக்கியம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருளிலக்கண நூல்களின் அமைப்பும் சிறப்பும் குறித்து விளக்குக.

14. (அ) சைவ சித்தாந்த சாத்திரங்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பம்மல் சம்பந்தரின் நாடகத் தமிழ்ப்பணியினை எழுதுக.

15. (அ) தமிழ் வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மறுமலர்ச்சி இலக்கியத்தில் இடம்பெறும் குறிப்பிடத்தக்க ஐந்து புலவர்கள் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. சங்க ஆற்றுப்படை இலக்கியங்களை விவரி.

17. இரட்டைக் காப்பியங்களின் சிறப்பியல்புகளை விரிவாக எடுத்துரைக்க.

18. தமிழ் இலக்கண நூல்களின் கட்டமைப்புகளைப் புலப்படுத்துக.

19. தமிழில் காணலாகும் பல்வேறு உரைவகை குறித்து விளக்குக.

20. இயக்கங்கள் வளர்த்த தமிழ் வளர் நிலைகளைக் கட்டுரைக்க.

———————

| S–5648 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**தமிழ்**

**இயைபுப்பாடம் - தமிழ் இலக்கண வரலாறு**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.

1. இலக்கணம் என்ற சொல்லினை முதன்முதலில் வழங்கியவர் யார்?

2. அகத்தியரின் மாணவர்தகள் எத்தனை பேர்?

3. பன்னிரு படலத்தின் வழிநூல் எது?

4. 'தமிழ் நெறிவிளக்கம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

5. வீரசோழியத்தின் உரையாசிரியர் யார்?

6. குணவீர பண்டிதர் - குறிப்பு தருக.

7. பன்னிரு படலம் என்றால் என்ன?

8. நவநீதப் பாட்டில் - பெயர்க்காணரம் கூறுக.

9. யார் முன்னிலையில் பிரயோக விவேகம் அரங்கேற்றப்பட்டது.

10. வைத்தியநாத தேசிகரின் மாணவர் யார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) இலக்கணத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத்தின் நூல் அமைப்பு பற்றி எழுதுக.

12. (அ) 'தமிழ் நெறிவிளக்கம்' என்ற நூலின் இயல்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) யாப்பருங்கலம் என்றால் என்ன? அவற்றை விளக்கி வரைக.

13. (அ) வீரசோழியத்தின் உரையால் அறிப்படும் வரலாற்றுக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) நேமிநாதத்தின் அமைப்பையும் சிறப்பையும் பற்றி விளக்குக.

14. (அ) சிதம்பரப் பாட்டியல் - குறிப்பு தருக.

(அல்லது)

(ஆ) மாறனகப் பொருள் நூலின் அரங்கேற்றமும் காலமும் பற்றி விவரி.

15. (அ) பாட்டியல் நூல்களை "பிரபந்த தீபிகை" பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பிரயோக விவேகத்தின் உரை இயல்பினை விவரி.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. ஐந்திலக்கண நூல்களை விவரித்தெழுதுக.

17. புறப்பொருள் வெண்பாமாலையின் படலங்களை தொகுத்தெழுதுக.

18. நன்னூலின் அமைப்பும் சிறப்பும் பற்றி கட்டுரைக்க.

19. நும் பாடப்பகுதி கொண்டு “பாப்பாவினம்” பற்றி விவரிக்க.

20. குட்டித் தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

---

| S–5649 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA4 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**தமிழ்**

**இயைபுப்பாடம் : கல்வெட்டியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. கல்வெட்டியல் என்றால் என்ன?

2. சித்திர எழுத்துக்கள் என்பவை யாவை?

3. கிரந்தம் என்றால் என்ன?

4. எண்கள் - விளக்கம் தருக.

5. கல்வெட்டு படிஎடுத்தல் - குறிப்பு வரைக.

6. மெய்க்கீர்த்தி என்றால் என்ன?

7. உருவ எழுத்து என்பன யாவை?

8. ஒலியெழுத்து என்றால் என்ன?

9. பாண்டியர் காலச் செப்பேடுகள் யாவை?

10. தொன்மையான செப்பேடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) தமிழ்நாட்டு எழுத்து முறையைச் சுருக்கித் தருக.

(அல்லது)

(ஆ) பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் வட்டெழுத்து இடம் பெற்ற விதத்தை எடுத்துக்காட்டுக.

12. (அ) கிரந்த எழுத்துக்களை சான்றுடன் கூறுக.

(அல்லது)

(ஆ) எண்கள் பற்றி விவரிக்க.

13. (அ) கல்வெட்டு படியெடுக்கும் செயல்முறையை விவரி.

(அல்லது)

(ஆ) தமிழ் கல்வெட்டுக்களின் வரலாறு பற்றி எழுதுக.

14. (அ) ஒலி எழுத்துக்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்கலையின் தோற்றம் பற்றி விளக்குக.

15. (அ) செப்பேடுகள் என்றால் என்ன? பல்லவர் காலச் செப்பேடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செப்பேடுகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. தமிழ்நாட்டு எழுத்து முறைகளின் வளர்ச்சி நிலையினை குறித்துக் கட்டுரைக்க.

17. எண்களின் சிறப்பியல்புகளை ஆராய்க.

18. கல்வெட்டு ஆய்வு பற்றி விளக்குக.

19. எழுத்துக்கலை பற்றி கட்டுரை வரைக.

20. கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் அரிய சொற்களைச் சான்றுகளுடன் நிறுவுக.

**S–5651**

| Sub. Code |
|---|
| 23BLT3C2 |

# B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025.

## Third Semester

## தமிழ்

## நம்பியகப் பொருளும் புறப்பொருள் வெண்பாமாலையும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. கூத்தர்க்குரிய செயல் யாது?

2. அகத்திணையியலில் இளையோர்க்குரிய செயல் என்ன?

3. களவில் இலக்கணத்தைத் தருக.

4. ஒரு சார் பகற்குறியின் வகைகளை எழுதுக.

5. வெட்சிப் படலத்தின் கொடை பற்றிக் குறிப்பிடுக.

6. பெருவஞ்சி என்றால் என்ன?

7. மறனுடைப் பாசி - குறிப்பு வரைக.

8. காந்தள் என்றால் என்ன?

9. ஆள்வினை வேள்வி பற்றி எழுதுக.

10. கபிலை கண்ணிய புண்ணிய நிலை என்பது யாது.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) குறிஞ்சியின் கருப்பொருள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) மருதத்தின் கருப்பொருள்கள் பற்றி எடுத்துரைக்க.

12. (அ) வன்புறையின் விரி யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) இரந்து பின்னிற்றல் விரி குறித்து எடுத்துரைக்க.

13. (அ) குறிப்பு வரைக.

(i) வஞ்சினக் காஞ்சி

(ii) மறக்காஞ்சி

(அல்லது)

(ஆ) முனைகடி முன்னிருப்பு, தமிஞ்சியினைச் சான்றுடன் எழுதுக.

14. (அ) குறிப்பு வரைக.

(i) மறனுடைப் பாசி

(ii) அழிபடை தாங்கல்.

(அல்லது)

(ஆ) காந்தள், வாள்நாட் கோள் குறித்துச் சான்றுடன் எழுதுக.

15. (அ) இயல்மொழி வாழ்த்து என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) குடுமி களைந்த புகழ் சாந்து நிலை, பரிசில் நிலை குறித்து எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. பாங்கர் பாகுபாட்டையும் அவர்கள் பணியையும் விளக்குக.

17. களவொழுக்கத்தில் பாங்கியின் பங்கு குறித்து வரைக.

18. காஞ்சிப் படலத்தின் கருத்துக்களை தொகுத்து வரைக.

19. வாகைப் படலத்தின் சிறப்புகளை விவரிக்க.

20. பாடாண் திணையின் தனித்தன்மைகளைத் திறனாய்க.

———————

| S–5653 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT4C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. பாத்திர மரபு கூறிய காதை – குறிப்பு வரைக.
2. மணிமேகலையின் பாத்திரங்கள் பெயரினைத் தருக.
3. கம்பராமாயணம் – குறிப்பு வரைக.
4. கடல் தாவு படலம் என்றால் என்ன?
5. பெரியபுராணத்தின் தனித்தன்மைகளைக் குறிப்பிடுக.
6. பூசலார் நாயனார் – குறிப்பு வரைக.
7. தேம்பாவணி பற்றி எழுதுக.
8. தேம்பாவணியில் உள்ள படலங்கள் நான்கினை எழுதுக.
9. சீறாப்புராணம் – குறிப்பு வரைக.
10. சீறாப்புராணத்தில் கதீஜாவின் கனவு என்ன?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும்.

11. (அ) "மணிபல் லவத்திடை மன் உயிர் நீத்தோன் தன்காத்து அளித்த தகைஆ அதனை" – என்ற கூற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) "நல்தவம் செய்வோர் பற்று அற முயல்வோர் யாவரும் இல்லாத் தேவர் நல் நாட்டுக்கு" என்ற அடிகளில் கருத்துக்களை எடுத்துரைக்க.

12. (அ) இராமாயணத்தில், மமேயந்திர மலையில் நிகழ்ந்த குழப்பத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கடல் தாவு படலத்தில் மலையிலும் கடலிலும் நிகழ்ந்த மாறுதல்கள் யாவை? விளக்குக.

13. (அ) பெரியபுராணத்தில் பூசலாரின் பண்புலன்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருநின்றவூரின் சிறப்புகளை எடுத்துரைக்க.

14. (அ) தேம்பாவணியில் வானுலக மன்னனாகிய திருமகனின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) "பூவும், வாசமும், பொதுளிய தாமமும் மணியும் காவும் நீழலும், காயமும் உயிரும் போல்" – என்று தேம்பாவணி எடுத்துரைக்கும் கருத்துக்களை எழுதுக.

15. (அ) சீறாபுராணத்தில் கதிஜா கண்ட கனவு யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) முகம்மதுவைக் கண்டு மயங்கி நின்ற கதிஜாவின் நிலை பற்றி எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. மணிமேகலையில் பாத்திரம் கொண்டு பிச்சை புக்கு காதையில் இடம்பெறும் கருத்துக்களை வரைக.

17. கம்பராமாயணத்தில் கடல் தாவு கடலத்தின் காட்சி வருணனைகளைக் கட்டுரைக்க.

18. பூசலார் நாயனார் புராணம் வழி அறியப்படும் கருத்துக்களைத் தொடுத்துரைக்க.

19. தேம்பாவணியில் பிரிந்த மகவைக் காண் படலக் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

20. சீறாப்புராணத்தில் கதிஜாவின் நிலை குறித்துத் திறனாய்க.

———————

| S–5654 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் இளம்பூரணம்

(CBCS 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. உயிர்க்குறில் எழுத்துக்கள் யாவை?

2. மாத்திரை - வரையறை தருக.

3. உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும் - பொருள் தருக.

4. எழுத்துச் சாரியைகள் யாவை?

5. புணர்ச்சியில் 'மெல்லினம் தோன்றுமிடங்களைச் சுட்டுக.

6. பனை முன் சுட்டு என்பதற்குரிய சாரியைகள் யாவை?

7. தாம், நாம் ஆகியவற்றுக்கான புணர்ச்சி விதிகளைத் தருக.

8. புள்ளி மயங்கியல் - பெயர்க்காரணம் தருக.

9. பத்தின் முன் இரண்டு - குறிப்பு வரைக.

10. வண்டு என்னும் சொல் எவ்வாறு புணரும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**ஓரிரு** பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மெய்யெழுத்தின் இயல்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) ஆய்தத்தின் இயல்பு யாது?

12. (அ) உயிர் எழுத்துக்களின் பொதுப்பிறப்பு குறிப்பு எழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியைகளின் பெயரும், முறையும் தொகையும் குறித்து எழுதுக.

13. (அ) முன்னிலை வினைச்சொல் முடிவு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) யா என் வினா எவ்வாறு புணரும்?

14. (அ) குற்றியலுகரப் பொதுப்புணர்ச்சி - விளக்குக.

(அல்லது)

(ஆ) திசைப்பெயர்ப்புணர்ச்சியை விளக்கி வரைக.

15. (அ) குயின், எயின் என்பனவற்றுக்கான புணர்ச்சி விதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அளவு, நிறைப் பெயர்களின் புணர்ச்சிகளை விவரி.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. தொல்காப்பிய எழுத்ததிகார இயல் வைப்பு முறையை ஆய்க.

17. புணர்ச்சி என்பதை விளக்கி, அதன் மூவகைத் திரிபுகளைச் சான்றுடன் விளக்குக.

18. இகர ஈற்றுப் புணர்ச்சி விதிகளைத் தொகுத்தெழுதுக.

19. புணர்ச்சி விகற்பங்களைத் தொகுத்துரைக்க.

20. தேன் என்னும் சொல் புணரும் விதத்தை ஆராய்க.

———————

| S–5655 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT4C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Fourth Semester**

தமிழ்

சிலப்பதிகாரம் – புகார்க்காண்டம்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                                                  Maximum : 75 Marks

**பகுதி அ**                                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. சிலப்பதிகாரத்தின் அறக்கருத்துக்கள் யாவை?

2. சிலப்பதிகாரம் – குறிப்பு வரைக.

3. அரங்கேற்று காதையின் கலைச் சிறப்பு என்ன?

4. அரங்கேற்று காதையில் ஆடல் நிகழ்ச்சி பற்றிக் கூறுக.

5. இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் நகர்க் காட்சியின் சிறப்பினைத் தருக.

6. கடலாடு காதையில் வித்தியாதரனின் விருப்பம் என்ன?

7. கானல்வரி பாடலில் சோழ நாட்டின் வளம் பற்றிக் கூறுவன யாவை?

8. வேனிற் காதையில் இளவேனில் பருவத்தின் தன்மை பற்றிக் குறிப்பிடுக.

9. கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகிக்கு ஆறுதல் கூறியது யார், அவரின் பண்புகள் யாவை?

10. நாடு காண் காதையில் முற்றத்தில் நட்புடன் விளங்கியது எது?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும்.

11. (அ) சிலம்பில் கோவலனது பெருநலம் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தில் மங்கர வாழ்த்தும் மங்கல அமளியில் ஏற்றுதலும் குறித்து எடுத்துரைக்க.

12. (அ) சிலம்பு கூறும் நாட்டிய மேடையின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலம்பில் கண்ணகி அமைந்த கடுந்துயர் குறித்து விளக்குக.

13. (அ) இந்திரவிழவு ஊர் எடுத்த காதையில் மருவூர்ப் பாக்கத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கடலாடு காதையில் மாதவியின் ஒப்பனை பற்றி விளக்குக.

14. (அ) கானல் வரிப் பாடலில் மாதவி பாடிய கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வேனிற்காதையில் மாதவி அடைந்த துயரங்களை விளக்குக.

15. (அ) கண்ணகி கண்ட கனவு யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) கண்ணகிக்கு தேவந்தி கூறிய அறிவுரைகளை எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. மங்கல வாழ்த்துப் பாடலில் மண நிகழ்ச்சி பற்றிக் கட்டுரைக்க.

17. அந்திமாலைச் சிறப்பு செய் காதையில் இடம்பெற்றுள்ள கருத்துக்களைச் சுருக்கி வரைக.

18. மாதவியின் ஆடல் நிகழ்ச்சிகள் பற்றிக் கட்டுரைக்க.

19. வேனிற்காதையில் கோவலன் மறுப்பு கூறிய கருத்துக்களை விளக்கி வரைக.

20. நாடுகாண் காதை எடுத்துரைக்கும் வழிநடைக் காட்சிகளை விவரி.

**S–5656**

**Sub. Code**
**23BLT4S1**

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Fourth Semester**

தமிழ்

கோயிற்கலை

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. அரண் என்றால் என்ன?

2. லோகமஹாதேவீச்சரம் – வரையறு.

3. 'வேஸர சிகரம்' – குறிப்பு தருக.

4. திருமாலுக்க உரிய குகைகள் யாவை?

5. விஜய நகர மன்னர்களில் உயர்ந்த கோபுரங்களை எடுத்தவர் யார்?

6. "துவார சாலை" என்ற எவற்றை குறிக்கப்படுகிறது?

7. மைத்ரேயர் உருவம் எங்கு கண்டெடுக்கப்பட்டது?

8. திருவெண்காட்டு கோயிலில் யாருடைய காலத்தில் செப்பு உருவங்கள் செய்து வைக்கப்பட்டன?

9. ஓவியனின் கைவினைக்கு சிறந்த எடுத்துக்காட்டுத் தருக.

10. பாண்டியர் கால ஓவியங்களுக்கு சான்றுகள் தருக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) கட்டடக்கலையின் தொன்மையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) கொட்டாட்டுப் பாட்டு பற்றி எழுதுக.

12. (அ) பாண்டியர் காலம் கோயில்கள் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) செம்பியன் மாதேவியின் சிறப்பினை விளக்குக.

13. (அ) கற்சிற்பங்கள் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சோழர் காலச் சிற்பங்களின் தோற்றம் பற்றி எழுதுக.

14. (அ) கல்வெட்டுக்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) செப்புத் திருமேனிகள் வகைகளை விளக்குக.

15. (அ) பாண்டியர் கால ஓவியங்களின் சிறப்பினை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அரசன், அரசி ஓவியங்களின் பெருமைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளி.

16. சங்க மகளிரும் ஓவியக் கலையும் பற்றி விளக்குக.

17. இராஜராஜசோழனின் கோயிற்கலைகளை கட்டுரை வடிவில் தருக.

18. தமிழ் நாட்டுக் கோயில்களின் கோபுரங்கள் பற்றி விவரி.

19. செப்புத் திருமேனிகள் பற்றி கட்டுரை வரைக.

20. விஜய நகர கால ஓவியங்களை விவரிக்க.